இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 16.03.2022
O.S.250/2015
வா.சா.1. அமுதா
4வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கில் 4ஆம் பிரதிவாதிக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்று எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தை எந்த வருடம் விலைக்கு வாங்கினேன் என்று எனக்கு தெரியாது. பட்டிகை சொத்தை விலைக்கு வாங்கி சமார் 2 மாதத்திற்குள் வீட்டு கட்ட ஆரம்பித்தோம். நான் விலைக்கு வாங்கும் போது பட்டிகை சொத்தில் கட்டிடம் எதுவும் இல்லை. வீட்டு கட்டுவதற்கு மாநகராட்சியில் இருந்து வரைபடம் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அந்த வரைபடம் அனுமதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அது எத்தனாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. நான் நகராட்சியில் இருந்து வரைபடம் அனுமதி பெறவில்லை என்றால் சரியல்ல. நான் வீட்டு கட்டிய பின்பு எனது கணவர் பெயரில் வரி செலுத்தி வருகிறோம். 2007ல் மாநகராட்சியிலிருந்து யாரும் உரிமை ஆவணம் எதுவும் என்னிடம் கேட்கவில்லை. 24.09.2014ஆம் தேதி 4ஆம் பிரதிவாதி பட்டிகை சொத்தில் காம்பவுண்ட் சுவரை சேதப்படுத்தவில்லை. 18.02.2015ல் மாநகராட்சியிலியிருந்து உரிமை ஆவணங்களை தாக்கல் செய்ய கோரி வா.சா.ஆ.2 அறிவிப்பு நோட்டீஸ் அனுப்பினார்கள் என்றால் சரிதான். 2 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு பட்டிகை சொத்திற்கான சொத்து வரி ரசீதை அவர்கள் பெயரில் மாற்றம் செய்ய கோரியதால் வா.சா.ஆ.2 அறிவிப்பு அனுப்பியிருந்தார்கள் என்றால் சரிதான். பட்டிகை சொத்தில் வீடு கட்டியதிலிருந்து எனது கணவர் பெயரில்தான் வரி செலுத்தி வருகிறோம். 1 முதல் 3 பிரதிவாதிகளின் பெயரில் வரி பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு வழங்கப்படுமோ அந்த தீர்ப்புக்கு ஏற்ப மாநகராட்சி வரி பெயர் மாற்றம் செய்து கொள்வார்கள் என்றால் சரிதான். எனவே 4ஆம் பிரதிவாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.